Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Culture in Silampu

**Dr M. Shyamala,** Assistant Professor,
Department of Tamil, Gurunanak College, Chennai-42.
**ORCiD: https://orcid.org/0000-0002-8616-4246**
**DOI: 10.5281/zenodo.6619890**

## Abstract

*Culture refers to art which means quality, merit, type and manner etc. Culture highlights not only the developed state of the people, but also the degenerated state of the society. In "Silappathikaram", the best characteristic features of the epic, Kovalan, Kannaki and Madhavi's virtues are seen in a noteworthy way. Tamil culture is also shown in the epic. Hence, the paper scrutinizes the portrayal of culture in the epic "Silappathikaram".*

**Keywords:** Culture, *Silappathikaram*, Kovalan, Kannaki and Madhavi, noteworthy.

## References
[1] Elangovadigal, *Silappathikaram Moolamum Uraiyum*, Kazhaga Veliyidu, Chennai, 1981.
[2] Parimelazhgar, *Thirukkural*, Kazhaga Veliyidu, Chennai, 1982.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# சிலம்பில் பண்பாடு

**முனைவர் ம.சியாமளா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, குருநானக் கல்லூரி,சென்னை 42.
**ORCiD: https://orcid.org/0000-0002-8616-4246**
**DOI: 10.5281/zenodo.6619890**

**ஆய்வுச்சுருக்கம்**

*பண்பாடு என்பது குணம், தகுதி, விதம், சுபாவம் முறை என்ற பொருள் கலைக் குறிக்கிறது. பண்பாடு, மாந்தரின் வளர்ந்த நிலையை மட்டுமன்றி, சமுதாயத்தின் படிந்த நிலையையும் எடுத்துக் காட்டுகின்றது. சிலப்பதிகாரத்தில் காப்பியப்பண்புகள், கோவலன், கண்ணகி, மாதவி போன்றோர் மேற்கொண்டிருந்த சிறந்த பண்பு நலன்கள் குறிப்பிடத்தக்கன.*

**திறவுச்சொற்கள்:** பண்பாடு, சிலப்பதிகாரம், கோவலன், கண்ணகி, மாதவி, பண்பு நலன்கள்

**முன்னுரை**

முத்தமிழ்க் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரத்தில் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் பொதிந்து கிடப்பதைக் காண முடிகிறது. வணிக குலத்தில் தோன்றிய கோவலன் கண்ணகியின் இயல்பு வாழ்க்கையை யதார்த்தமாக நிலையில் சுட்டிச் சென்றுள்ளார் இளங்கோவடிகள் அரசர்களையும் தெய்வங்களையுமே காப்பியத் தலைவர்களாகக் கையாண்ட அந்தக் காலத்தில் குடிமக்களாகிய கோவலன் கண்ணகியைக் காப்பியத் தலைவர்களாக்கிய இளங்கோவடிகளின் இலக்கியப் பண்பு எண்ணி வியக்கத்தக்கதாகும். மனித குலத்தின் வாழ்வியல் முறைமைகளை வகைப்படுத்தி தொகைப்படுத்தி தகைமை சான்ற காப்பியமாகச் சிலப்பதிகாரத்தைப் படைத்துள்ள விதம் போற்றுதற்குரியது.

**குலப் பண்பும் ஈதலும்**

அந்த வகையில் தமிழ்ப்பண்பாடு மதுரைக் காண்டத்தில் அடைக்கலக் காதையிலும், கொலைக்களக் காதையிலும் மிகச் சிறப்பாகவே காணப்படுகிறது. எவ்வாறெனில் கோவலனும், கண்ணகியும் கவுந்தியடிகளின் துணையுடன் மதுரை மாநகருக்கு வருகின்றனர். அவ்விருவரையும் மாதிரி என்னும் ஆயர்க்குலப் பெண்ணிடம் கவுந்தியடிகள் அடைக்கலப்படுத்துகிறாந். அங்ஙனம் அடைக்கலப்படுத்தும் நிலையில் இடையர் குலத்தின் தீதில்லாத் தொழிலும், மாதிரியுன் ஈதல் பண்பும் எடுத்துரைக்கப்படுகின்றன.

**ஆகாத்தோம்பி ஆப்பயன் அளிக்கும்**
**கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை (அடைக்கல. 120-121)**

என்று கூறுவதால் ஆவினைக் காத்து அதனால் பெறக்கூடிய பயனைப் பிறருக்குக் கொடுத்து வாழும் குற்றமற்ற வாழ்க்கையினை உடையவர் இடையர் என்றும், இயல்பிலேயே இடையர்குலத்தவரிடம் ஈதல் பண்பு உள்ளதை அறியலாம். அதிலும்,

**தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள் (அடைக்கல.122)**

மாதரி குற்றமில்லாதவள். முதுமையுடையவள். இவை எல்லாவற்றிலும் மேலாக நடுவுநிலையுடையவள். பிறரைப் பேணிக்காக்கக் கூடிய தன்மையும் உடையவள். ஆசிய மாதரிக்குச் சற்றி மிகையாகவே உள்ளதை அறியலாம். ஈதல் பண்பு இருந்தால் மட்டுமே இசைபட வாழ முடியும் என்பதை அனைவரும் உணர்ந்திருந்தாலும், ஈதல் குலன் உடையான் கண்ணே உள என்பதை வள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கிணங்க மாதரியும் தன்னிடம் அடைக்கலமாக வந்த கண்ணகிக்கு வேண்டிய உதவிகள் செய்யுமாறு தன் மகள் ஐயையே அனுப்புகிறாள். பின்னர்,

**இடைக்குல மடந்தையர் இயல்பிற் குன்றா**
**மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபிற்**
**கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்**
**…கோவலனை மாதே கொள்கெனக் கொடுப்ப (கொலைக்.22-28)**

என்று சமைப்பதற்குத் தேவையான கலங்களையும், காய்கனிகளையும் கொள்ளெனக் கொடுக்கிறாள். எவர் ஒருவர் பிறர் கேட்காமலேயே தம்மிடம் இருக்கும் பொருளைக் கொடுக்கும் ஈகைக் குணம் அவரே உயர்குடிப் பிறந்தவராவர். அந்த வகையில் மாதரி தாம் பிறந்த குடிக்குப் பெருமை சேர்ப்பதோடு காப்பியத்தில் தானும் உயர்வாகப் பேசப்படுகிறாள்.

**கற்பொழுக்க நெறி**

கணவன் எத்தகு வாழ்க்கை முறையினை மேற்கொள்பவனாயினும் தாம் கற்பொழுக்க நெறியினின்றும் பிறழாது நிற்றல் வேண்டும் என்ற கொள்கையினையுடையவரயிருந்தனர் பெண்கள். அந்த நெறிப்படி வந்த பெண்களில் அருந்ததிக்கு அடுத்த நிலையில் உரைசால் பத்தினியாகப் போற்றப்படுகின்றவள் கண்ணகி. அதனால் தான் கொலைக்களக் காதையில் கண்ணகி ஓரிடத்தில்,

**போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்**
**மாற்றா உள்ள வாழ்க்கையே ஆதலின்**
**ஏற்றெழுந்தெனன் யான் (கொலைக்.81-83)**

என்று கோவலனின் மாறுபட்ட ஒழுக்க செயலைச் சுட்டியுரைத்தாலும், அவனது மனக்கருத்திற்குச் சற்றும் மாற்றமில்லாதவள் தான் என்பதாலும், கற்பொழுக்க நெறியில் தவறாததாலுமே எழுக என்றவுடன் எழுந்தேன் என்று கூறுகிறாள்.

**விருந்தோம்பற் பண்பு**

**இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு. (திருக். 81)**

என்னும் குறலில் இனிய இல்வாழ்க்கை வாழ்பவர் விருந்தோம்பல் பண்பை மேற்கொள்வர் என்று உணர்த்தப்படுகிறது. ஆனால் கண்ணகியோ தன் கணவன் தன்னைவிட்டு பிரிந்ததால் தான் விருந்தோம்பல் பண்பை இழந்துவிட்டதாக வருந்துகிறாள். எவ்வாறெனில்

**அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை (கொலைக்.71-73)**

என்று அறவோர், அந்தணர், துறவோர் ஆகிய சான்றோரையும் சிறப்புடைய விருந்தினரையும், எதிர் கொண்டழைத்து பணிவிடை செய்தலையும் இழந்து விட்டதாய்க் கண்ணகி வருந்ததுவது

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

விருந்தோம்பல் பண்பை மீச்சிறப்புடையதாக்குகிறது. அதிலும் இழந்த என்னை என்ற சொல் பண்பாட்டிற்குப் புறம்பாய்த்தான் இருந்ததாக எண்னி மிகவும் வருந்துவதாக உள்ளது.

**நிறைவுரை**

ஈகை, கற்பொழுக்கம், விருந்தோம்பல் ஆகிய மூன்று பண்புகளும் பண்பாட்டினை மிளிரச் செய்வன. ஆயினும் நாகரிகத்தின் மேலீட்டினால் பண்பாடு மாற்றுப் பாதையில் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மேற்கூறிய பண்பாட்டுச் செயல்கள் நாகரிகத்துடன் இணைந்து, சற்றே நலியத் தொடங்கியுள்ளன. அவ்வாறில்லாமல் தமிழர் தம் பண்பாட்டு நெறியிலிருந்து பிறழாமல் உடையோர் இல்லார்க்கு ஈயும் தன்மையராகவும், பெண்கள் கற்பொழுக்க நெறி பிறழாதவராகவும் இல்லற வாழ்வில் இனிது இருப்போர் விருந்தோம்பற் பண்பிற் சிறப்போராகவும் திகழ வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**

[1] இளங்கோவடிகள், *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்*, கழக வெளியீடு,சென்னை 1981.

[2] பரிமேலழகர், *திருக்குறள்*, கழக வெளியீடு, சென்னை -1982.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.